செய்தி வெளியீடு எண்: 276 நாள்:**01.06.2009**

**<u>பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாட்டினை மேம்படுத்த அனைத்து மாவட்டங்களிலுள் உயர் அலுவலர்களுடன் மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் ஆய்வு</u>**

**உணவுத் துறை, வருவாய்த் துறை, கூட்டுறவுத் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றின் அனைத்து மாவட்டங்களிலுள்ள உயர் அலுவலர்களுடன் பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாட்டினை மேம்படுத்த மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்கள்.**

**சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் இன்று** (01.06.2009) **காலை** 10.30 **மணிக்கு ஆய்வுக் கூட்டத்தை தொடங்கி வைத்து மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் உரையாற்றுகையில் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் அனைத்து பொருட்களும், அனைத்து தரப்பினருக்கும் எவ்வித தங்குதடையின்றி அரசு நிர்ணயித்துள்ள விலையிலேயே வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்கள். மேலும், போலி குடும்ப அட்டைகளை ஒழிக்க அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. புதிய குடும்ப அட்டைக்கான விண்ணப்பங்கள் 30 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட வருவாய் ஆய்வாளர்களால் தணிக்கை செய்யப்பட்டு வட்ட வழங்கல் அலுவலர்களால் இறுதி செய்யப்பட வேண்டும். தகுதியுள்ள குடும்ப அட்டை விண்ணப்பங்கள் 30வது நாள் அச்சடிக்க அனுப்பி 10 நாட்களுக்குள் அச்சடிக்கப்பட்டு 60 நாட்களுக்குள் மனுதாரருக்கு குடும்ப அட்டை வழங்கப்பட வேண்டும். இதற்கான அஞ்சல் அட்டை தகவல் அனுப்பப்பட வேண்டும். தள்ளுபடி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பொருத்தமட்டில் காரணங்களுடன் விண்ணப்பதாரருக்கு பதில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பதாரர்கள் அனைவருக்கும் விண்ணப்பம் சமர்ப்பிக்கும்போது பதில் எண்ணுடன் ஒப்புதல் சீட்டு வழங்கப்பட வேண்டும். வீடு வீடாக சென்று கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வரும் மாவட்டங்களில் பெறப்பட்டுள்ள மேல்முறையீட்டு மனுக்களை தீவிர ஆய்வு செய்து உண்மையிலேயே போலி குடும்ப அட்டைகள் தான் என்ற நிரூபணம் ஆகும் குடும்ப அட்டைகளை மட்டுமே இரத்து செய்ய வேண்டும். நியாயவிலைக் கடைகளில் உள்ள 'அ' பதிவேட்டினையும் வட்ட வழங்கல் அலுவலகத்திலுள்ள 'அ' பதிவேட்டினையும் ஒத்திசைவு** (compare) **செய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இப்பணியில் அலுவலர்கள் தீவிர கவனம் செலுத்தி விரைந்து முடிக்க வேண்டும்.**

**நியாயவிலைக் கடைகளில் பாமர மக்களும் அறியும் வண்ணம் அரிசி, மண்ணெண்ணெய், சர்க்கரை மற்றும் சிறப்பு பொது விநியோக திட்டப்**

**பொருட்கள் ஆகியவற்றின் விலைப் பட்டியல் வைக்கப்பட வேண்டும் என்றும் அலுவலர்கள் நியாயவிலைக் கடைகளுக்கு ஆய்வுக்கு செல்லும்போது மின்னணு தராசுகள் நல்ல நிலையில் செயல்படுகிறதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். மாவட்ட வழங்கல் அலுவலர்கள் தினந்தோறும்** 5 **நியாயவிலைக் கடைகளை ஆய்வு செய்து ஆணையருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும். மகளிர் சுய உதவிக் குழுக்கள் நடத்தும் நியாயவிலைக் கடைகளை மாவட்ட வழங்கல் அலுவலர்கள் கட்டாயம் ஆய்வு செய்ய வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டிடம் கட்டவும், மக்கள் பிரதிநிதிகள் பகுதிநேரக் கடை திறக்கக் கோரும் விண்ணப்பங்களை உடனடியாக பரிசீலனை செய்யவும், பழுதடைந்துள்ள நியாயவிலைக் கடைகளை செப்பனிட உரிய நடவடிக்கைகளையும் மாவட்ட வழங்கல் அலுவலர்கள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும். அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்லும் லாரிகள் ஒவ்வொரு நாளும் நிர்ணயிக்கப்பட்ட வழித்தடத்தில் தான்** (Route Chart) **செல்கிறதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். மண்ணெண்ணெய் லாரிகளையும், வழித்தடம் நிர்ணயித்து அனுப்ப வேண்டும். முதன்மைச் சங்கங்கள்** (lead society) **இணைப்புச் சங்கங்களில் பிரதிநிதிகள் காலை 9.00 மணிக்கு கிடங்குகளுக்கு சென்று எடை இயந்திரங்கள் சரியாக உள்ளதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். மின்னணு தராசுகள் இயக்குவதற்கு ஏதுவாக அனைத்து நியாயவிலைக் கடைகளையும் மின்மயமாக்கப்பட வேண்டும். நியாயவிலைக் கடைகளிலுள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப மண்டல இணைப்பதிவாளர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தேர்தல் ஆணையத்தின் அறிவுரைப்படி தேர்தல் சமயத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் படம் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்ட விலைப் பட்டியல் உள்ள வினாயில் போர்டுகள் அகற்றப்பட்டிருந்தது. அவற்றை எல்லா கடைகளிலும் மீண்டும் வைக்கப்பட்டுள்ளதா என்பதை மண்டல இணைப்பதிவாளர்கள் உறுதி செய்ய வேண்டும்.**

**இந்திய உணவுக் கழகத்திலிருந்து அரிசி மூட்டைகளை கொண்டு வந்து நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளில் அடுக்கி வைக்கும்போது முதலில் வரும் மூட்டைகளை முதலிலேயே நியாயவிலைக் கடைகளுக்கு அனுப்ப வேண்டும். உணவு தானியங்கள் பூச்சிகளால் பாதிக்காதபடி பாதுகாக்க வேண்டும். கிடங்குகளை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். கிடங்குகளிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு அனுப்பப்படும் பொருட்கள் தான் நியாயவிலைக் கடைகளில் இருப்பில் உள்ளதா என்பதை மண்டல மேலாளர்கள் ஆய்வு செய்து அறிக்கை அனுப்ப வேண்டும். கிடங்குகளிலிருந்து லோடு ஏற்றப்படுவதற்கு முன்னரே அனைத்து மூட்டைகளிலும் எடை சரியாக உள்ளதா என்பதை மண்டல மேலாளர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும். நீண்ட தூரத்திற்கு செல்ல வேண்டிய லாரிகளை காலை** 9.00 **மணிக்கே லோடு ஏற்றி அனுப்ப வேண்டும். மாலை**

4.00 மணிக்கு மேல் லோடு ஏற்றி அனுப்புவதை தவிர்க்க வேண்டும். கிடங்கு பொறுப்பாளர், பாயிண்ட் கிளார்க், கூட்டுறவு முதன்மைச் சங்கம் மற்றும் இணைப்புச் சங்கப் பிரதிநிதிகள் மாதிரி சோதனை பதிவேடு (test check register) பராமரிக்க வேண்டும். கூட்டுறவு சார்பதிவாளர் (பொ. வி. திட்டம்) தினந்தோறும் சுழற்சி அடிப்படையில் கிடங்குகளுக்கு சென்று ஆய்வு மேற்கொள்ள வேண்டும். மண்டல இணைப்பதிவாளர்கள், துணைப்பதிவாளர்கள், சார் பதிவாளர்கள் (பொது விநியோகத் திட்டம்) கிடங்குகளுக்கு ஆய்வுக்கு செல்லும்போது அங்குள்ள பதிவேட்டில் குறிப்புகளை எழுதி வைக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்கள். விரிவான ஆய்வு மேற்கொண்ட உணவு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்ட ஒதுக்கீடு பொது மக்களுடைய நுகர்வு, போலி குடும்ப அட்டைகளை களையும் பணியின் முன்னேற்றம், நியாயவிலைக் கடைகளில் வழங்கும் பொருட்களின் தரம், தேவை, இருப்பு, கிடங்குகளில் இருப்பு நிலைமை, காலிப்பணியிடங்களை நிரப்புதல், புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல், பணியாளர்கள் பொது மக்களிடம் பழகும் விதம், இருப்பு இல்லாத கடைகள், மூடப்பட்டிருந்த கடைகள், மக்கள் குறை தீர்க்கும் நாளில் பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், கட்டுப்பாட்டு அறைகளில் பெறப்படும் புகார்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் அனைத்து பணிகளையும் மாவட்ட வாரியாக ஆய்வு செய்து உயர் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. க. இராஜாராமன், இ.ஆ.ப., ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றம் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. வெ. சந்திரசேகரன், இ.ஆ.ப., இணை ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. T.P. சுந்தரமூர்த்தி, இ,கா.ப., காவல் துறை தலைவர், குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை, திரு. ஜித்தேந்த்ரநாத் ஸ்வைன், இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், திரு.கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர், திரு. வீரசண்முகமணி, இ.ஆ.ப., நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், திரு. ஆர். ராஜேந்திரன், விழிப்புப்பணி அலுவலர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபப் கழகம், மாவட்ட வழங்கல் அலுவலர்கள், மண்டல இணைப்பதிவாளர்கள், மண்டல மேலாளர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியோர்கள் பங்குபெற்றனர்.

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.